செய்தி வெளியீடு

செ.வெ.எண்.05 நாள்:01.11.2017

# பொதுமக்களுக்கு நீலகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் முக்கிய அறிவிப்பு

நீலகிரி மாவட்டத்தில் வரும் 07.12.2017 அன்று நடைபெறவுள்ள பாரத ரத்னா டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழாவில், அன்னாரது சிறப்பு வாய்ந்த, அரிய புகைப்படங்களை விழாவில் இடம்பெறச் செய்யவுள்ளதால், நீலகிரி மாவட்ட வாழ் பொதுமக்களிடம் டாக்டர். எம்.ஜி.ஆர் அவர்களின் புகைப்படங்கள் ஏதேனும் இருப்பின் அதனை கீழ்க்காணும் முகவரிக்கு நேரிலோ, தபால் மூலமாகவோ அல்லது இமெயில் மூலமாகவே வழங்குமாறும், டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களுடன் பழகிய அனுபவம் எவருக்கேனும் இருக்குமேயானால் அதனை கீழ்க்காணும் முகவரிக்கு நேரில் வந்து பகிர்ந்து கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

முகவரி

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம்,
உதகமண்டலம், நீலகிரி மாவட்டம்

இமெயில் - ootypro@gmail.com
தொலைபேசி - 0423 – 2443820
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் கைபேசி எண் - 94980 42445